சுருக்கம்

பொதுப்பணித்துறை – பாசனம் – நபார்டு வங்கியின் ஆர்.ஐ.டிஎப் XI ன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட அணை பாதுகாப்பு, ஏரிகள் அமைத்தல், கால்வாய்கள் சீரமைத்தல் போன்ற 11 நீர்பாசன திட்டங்கள்– ரூ.1898.32 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி ( டபிள்யூ–1 ) த்துறை

அரசு ஆணை (நிலை) எண்.44 நாள் 21.02.2006

1) நபார்டு வங்கியின் கடித எண். என்பி/எஸ்டிடி/ ஆர்ஐடிஎப்/XI/தநா–82 பிஎசி 2005–2006, நாள் 2.12.2005.
2) தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண்.எப்1/1100/2005 ஆர்ஐடிஎப்– XI, நாள் 30.12.2005.

0–0–0

ஆணை

தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தனது 30.12.2005 நாளிட்ட கடிதத்தில் நபார்டு வங்கி ஆர்.ஐடிஎப் XI கீழ் அணை பாதுகாப்பு, ஏரிகள் அமைத்தல், கால்வாய் சீரமைத்தல் போன்ற 11 நீர்ப்பாசன திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவித்து இதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு அரசைக்கோரியுள்ளார். இந்த 11 நீர்ப்பாசன திட்டங்களுக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 1898.32 இலட்சம். இதில் நபார்டு வங்கி கடனுதவியாக ரூ1803.42 இலட்சம் தொகையை சில நிபந்தனைகளுடன் வழங்க உள்ளது இதில் நபார்டு வங்கி வழங்கும் தொகை நீங்கலாக மீதி தொகையான ரூ.94.90 இலட்சத்தினை மாநில அரசு ஏற்க வேண்டும்.

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் மாவட்டம் | பயன்டையும் பரப்பளவு (ஹெக்டர்) | தலைமைப் பொறியாளரின் திட்ட மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | நபார்டு வங்கி வழங்கியுள்ள கடனுதவி (ரூபாய் லட்சத்தில்) | மாநில அரசால் வழங்கப்பட வேண்டிய எஞ்சிய தொகை (ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | தூத்துகுடி மாவட்டத்தில் உள்ள காயாமொழி ஏரியை மேம்பாடு செய்தல் மற்றும் காயா மொழி ஏரிக்கு நீர்வரத்து கால்வாய் அமைத்தல் | 184.00 | 92.46 | 87.84 | 4.62 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சீலநாயக்கன்பட்டி கிராமத்தில் ஒடையின் குறுக்கே ஏரியமைத்தல் | 146.00 | 169.68 | 161.20 | 8.48 |
| 3. | புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், செங்கமேடு கிராமத்தில் மகாராஜா சமுத்திரம் ஆற்றின் குறுக்கே ஏற்கனவே உள்ள மண் அணையை கல் அணையாக மாற்றி செங்கமேடு பெரிய குளம் மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் | 151.00 | 92.65 | 88.02 | 4.63 |
| 4. | சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஸ்டான்லி அணையின் பாதுகாக்கும் பணி | 1160.00 | 83.66 | 79.48 | 4.18 |
| 5. | மேட்டூர் பிரதான கால்வாயை நவீனப்படுத்தல் | 1800.00 | 1135.09 | 1078.34 | 56.75 |
| 6. | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் கரைப்போட்டனார் ஆற்றின் குறுக்கே உள்ள அணைக்கட்டை புனரமைத்தல் | 621.00 | 101.58 | 96.50 | 5.08 |
| 7. | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொம்மரா—ஜூபேட்டை கிராமத்தில் புதிய ஏரியமைத்தல் | 43.00 | 33.01 | 31.36 | 1.65 |
| 8. | திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாய் கண்டிகை கிராமம் கண்ணன் கோட்டை உறிசாராஜனேரி ஏரியின் உபரியில் அணைக் கட்டுதல் | 144.00 | 100.82 | 95.78 | 5.04 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், ஆத்தூர் கிராமத்தில் விலாங்குடி ஒடையின் குறுக்கே அணைக்கட்டி தேலூர் பெரிய ஏரி மற்றும் விலாங்குடி ஏரிகளுக்கு தண்ணீர் வழங்குதல் | 70.00 | 35.03 | 33.28 | 1.75 |
| 10. | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், மூலக்காடு கிராமத்தில் வாச்சுக்கல் ஒடையின் குறுக்கே க.ச.எண்.44 இல் தடுப்பணைக் கட்டுதல் | 38.00 | 23.78 | 22.59 | 1.19 |
| 11. | கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், குட்டூர் கிராமத்தில் பர்கூர் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டி ஜி.டி. குப்பம் ஏரிக்கு தண்ணீர் வழங்குதல் | 30.00 | 30.56 | 29.03 | 1.53 |
| | மொத்தம் | 4387.00 | 1898.32 | 1803.42 | 94.90 |

**2.** தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அனுப்பியுள்ள மேற்கண்ட கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தபின்னர் அதனை எற்று, மேலே குறிப்பிடப்பட்டுள்ள **11** நீர்ப்பாசன திட்டங்களை ரூ. **1898.32** இலட்சம் (ரூபாய் பதினெட்டு கோடியே தொன்னூற்று எட்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் மட்டும்) செலவில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கிறது. இந்த மொத்த மதிப்பீட்டில் நபார்டு வங்கியிடமிருந்து ரூ.**1803.42** இலட்சம் (ரூபாய் பதினெட்டு கோடியே மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) கடனுதவியாக பெறவும், மீதித்தொகையான ரூ.**94.90** இலட்சம் (ரூபாய் தொன்னூற்று நான்கு இலட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) மாநில அரசு நிதியில் இருந்து வழங்கவும் அரசு ஒப்புதலளிக்கிறது.

**3.** மேலே பத்தி **2**–ல் ஒப்புதலளிக்கப்பட்ட **11** நீர்ப்பாசன திட்டங்களுக்கான செலவினங்கள் கீழ்க்காணும் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

" **4701** பெரிய நடுத்தர பாசனத் திட்டங்கள் குறித்த மூலதன செலவு **03** நடுத்தரப் பாசனம் – வணிகத்தன்மை வாய்ந்தது – **345** நடுத்தர பாசனத் திட்டங்கள் II மாநில திட்டம் – JB ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவி திட்டம் XI ன் கீழ் நபார்டு கடன் நிதியுதவியுடன் நடைமுறையில் உள்ள நீர்ப்பாசன கால்வாய், ஏரிகளை புனரமைத்தல் மற்றும் அணையை புரனரமைத்து பாதுகாத்தல் - **16** பெரும் பணிகள் (து.தொ.கு. **4701–03– 345 JB 1607**)"

**4.** மேலே பத்தி 2 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணை பணித்திட்ட செலவினமாகும் (New instrument of Service) இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை, நிதி (வ/செ/பொ 1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். தேவையான தொகைக்கு முன்பணம் ஒப்பளிப்பு செய்ய உரிய படிவத்தில், இந்த அரசாணையுடன் நிதி (வ/செ.பொ.1) துறைக்கு விண்ணப்பிக்க, முதன்மை தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொ) பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2006–2007ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவையும், தக்க தருணத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**5.** இத்திட்டத்தை மேற்கொள்ளும்பொழுது நபார்டு நிறுவனம் நீர்ப்பாசன திட்டங்களுக்கு ஆர்ஐடிஎப்.–11 ன் கீழ் கடன் வழங்குவதற்கு விதித்த சிறப்பு விதிமுறைகளையும் வரையறைகளையும் தவறாது கடைபிடிக்க வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.

**6.** இந்த ஆணை நிதித்துறையின் இசைவினை அ.சா.கு. எண். 73/D.S(PU)2006. நாள் 21.2.2006 கூடுதல் நிதி ஒதுக்கப் பேரடு எண். 1546 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை, சென்னை–5
தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை–5
தலைமைப் பொறியாளர், சென்னை/திருச்சி/பொள்ளாச்சி/ மற்றும் மதுரை மண்டலம்
மாநில கணக்காயர், சென்னை –18/35
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்
பொதுப்பணித்துறையின் பாசனப் பிரிவுகள்
நிதி (பொப.11/வசெ,II/வழிவகை/ வசெபொ II) த்துறை, சென்னை–9
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
பொதுப்பணித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்